Ours bank with
Bank of Baroda

மதுரை மணி
Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
2, Town Hall Road, Madurai-625 001.

மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 106 | உள்ளூர் - 16.04.2026 | வியாழன் | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com
Madurai Edition | *Vol 55 | * Issue 106 | வெளியூர் - 17.04.2026 | வெள்ளி | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

**அட்சய திரிதியில் சக்திவாய்ந்த யோகங்கள் யாருக்கு?**

**அரசு ஊழியர்களுக்கும் ஓய்வூதியதாரர்களுக்கும், 4 குட் நியூஸ்!**

**மதுரை மீனாட்சி திருக்கல்யாணம்: முன்பதிவு தொடக்கம்!**

**அனல் பறக்கும் தேர்தல் செய்திகள்!**

# மாநிலங்களவை துணைத் தலைவர் தேர்தல் தேதி அறிவிப்பு....!

டெல்லி, ஏப். 16–

மாநிலங்களவை எம்.பி.யாக இருந்த ஹரிவன்ஷின் மாநிலங்களவையின் துணைத்தலைவராக இருந்து வருகிறார். அவரது பதவிக் காலம், கடந்த ஏப். 9–ஆம் தேதியுடன் நிறைவடைந்தது. இதைத்தொடர்ந்து அந்த அவையின் எம்.பி.யாக ஹரிவன்ஷை குடியரசுத் தலைவர் நியமித்த நிலையில், ஏப்.10–ஆம் தேதி அவர் நியமன எம்.பி.யாக பதவியேற்றுக் கொண்டார்.




இந்த நிலையில், மாநிலங்களவை துணைத் தலைவர் பதவிக்கான தேர்தல் வரும் 17ந்தேதி வெள்ளிக்கிழமை நடைபெற உள்ளது. அந்தப் பதவியை ஏற்கெனவே தொடர்ந்து 2 முறை ஹரிவன்ஷ் வகித்த நிலையில், அப்பதவிக்கு அவர் மீண்டும் தேர்வு செய்யப்பட வாய்ப்புள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

இதனிடையே மாநிலங்களவைத் தலைவர், துணைத் தலைவர் இல்லாத வேளைகளில், அந்த அவையை வழிநடத்தும் குழுவை குடியரசு துணைத் தலைவரும், மாநிலங்களவைத் தலைவருமான சி.பி. ராதாகிருஷ்ணன் மாற்றியமைத்துள்ளார். அதன்படி அந்தக் குழுவில், அதிமுக எம்.பி. தம்பிதுரை, பாஜக எம்.பி.க்கள் தினேஷ் சர்மா, பாங்னோன் கோன்யாக், கன்ஷியாம் திவாரி, பிஜு ஜனதா தள எம்.பி. சஸ்மித் பத்ரா, காங்கிரஸ் எம்.பி. ஃபுலோ தேவி நேதாம் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர். இந்த தேர்தலில், எதிர்க்கட்சிகள் சார்பில் யாரும் போட்டியிடுவார்களா என்பது இன்று தெரிய வரும்.

# தொகுதி மறுவரையறை விவகாரம்: முக்கிய தகவல்கள்...!

டெல்லி, ஏப். 16–

நாட்டின் தென் மாநிலங்களில் கொந்தளிப்பை ஏற்படுத்தி இருக்கும் தொகுதி மறுவரையறை விவகாரம் தொடர்பாக சில அதிர்ச்சி தகவல்கள் வெளியாகி உள்ளன. ஒன்றிய அரசு நாடாளுமன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்ற திட்டமிடும் தொகுதி மறுவரையறையால் தமிழ்நாடு உள்ளிட்ட தென்மாநிலங்களுக்கு ஏற்படும் பாதிப்பு கள் குறித்த தகவல்கள் அரசியல் சூழ்ச்சியா என்று பலரது மனதிலும் கேள்வி களை எழுப்பி இருக்கிறது.




ஏனென்றால் தொகுதி மறுவரையறையால் நாடாளுமன்றத்தில் தென் மாநிலங்களின் பிரதிநிதித்துவம் வெகுவாக குறையும் என்று தெரிகிறது. தற்போதைய நிலவரப்படி தென் மாநிலங்களின் பிரதிநிதித்துவம் நாடாளுமன்றத்தில் 24.3 சதவீதமாக இருந்து வருகிறது. ஒருவேளை ஒன்றிய அரசின் திட்டப்படி தொகுதி மறுவரையறை மசோதா வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டு விட்டால் தென் மாநிலங்களின் பிரதிநிதித்துவம் நாடாளுமன்றத்தில் 20.7 சதவீதமாக குறைந்து விடும் என தெரிகிறது.

அதே நேரம் தற்போதைய நிலவரப்படி 38.1 சதவீதமாக இருக்கும் இந்தி பேசும் வட மாநிலங்களின் நாடாளுமன்ற பிரதிநிதித்து வம் தொகுதி மறுவரைய றைக்கு பின் 43.1 சதவீதமாக அதிகரித்து விடும் என்ற அதிர்ச்சி தகவல் வெளியாகி இருக்கிறது.

அதே போல ஒன்றிய அரசு நிறைவேற்ற துடிக்கும் தொகுதி மறுவரையறைப்படி இந்தி பேசும் மாநிலங்களின் மக்களவை தொகுதி எண்ணிக்கை சுமார் 76.8 சதவீதம் உயரும். ஆனால் இதோடு ஒப்பிட்டால் தொகுதி மறுவரையறைக்கு பின் தென் மாநிலங்களின் மக்களவை தொகுதி வெறும் 33.3 சதவீதம் மட்டுமே உயரும் என்று தகவல் வெளியாகி இருக்கிறது. இந்த சதவீதம்படி பார்த்தால் ஒன்றிய அரசின் மறுவரையறைப்படி வட மாநிலங்களின் மக்களவை தொகுதி எண்ணிக்கை, தென் மாநிலங்களை விட சுமார் 2 மடங்கு உயரும். 2011–ஆம் ஆண்டு மக்கள் தொகைப்படி தொகுதி மறுவரையறை நடைபெறும் என்பதால், மக்கள் தொகையை கட்டுப்படுத்திய தென் மாநிலங்களுக்கு, மறுவரையறையால் மாநிலங்களின் பிரதிநிதித்துவம் மாறாது என பாஜக அளித்த உறுதிமொழி மசோதாவில் இல்லை என்றும் தகவல் வெளியாகி இருக்கிறது.


தொகுதி மறுவரையறை செய்வதால் தென் மாநிலங்களுக்கு பாதிப்பு ஏற்படாது என பாஜக கூறியிருந்த உறுதிமொழிகள் காற்றில் பறக்கவிடப்பட்டுள்ளன என அரசியல் விமர்சகர்கள் குறிப்பிட்டு உள்ளனர். மறுவரையறை மசோதா நிறைவேறுமானால் பாஜக வலுவாக உள்ள மாநிலங்க ளுக்கு சாதகமான சூழல் நாடாளுமன்றத்தில் உருவாகும், அதே நேரம் பாஜக பலவீனமாக உள்ள மாநிலங்கள் நாடாளுமன்றத்தில் பலவீனமடையும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2026–27 மக்கள் தொகை கணக்கெடுப்பு காலதாமதமாவதால், 2011–ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மறுவரையறை செய்ய பாஜக திட்டமிடுவதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

# மக்களவையில் தாக்கலானது

# அரசியலமைப்பு சட்டம் 131-வது திருத்த மசோதா

# தொகுதிகள் மறுவரையறை மசோதா

## யூனியன் பிரதேசங்களின் சட்டங்கள் ...






புதுடெல்லி, ஏப். 16–

தொகுதி மறுவரையறை, மகளிருக்கு 33 சதவீத இட ஒதுக்கீடு மசோதாக்களை மக்களவையில் மத்திய சட்ட அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் தாக்கல் செய்தார்.

நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத் தொடர் இன்று (16.04.2025)காலை 11 மணிக்குக் கூடியது. சபாநாயகர் ஓம் பிர்லா அவையை வழிநடத்தினார். அவை கூடியதும் சட்ட அமைச்சர், மசோதாக்களை அவையில் முன்மொழிய அனுமதி கோரினார்.

அப்போது பேசிய காங்கிரஸ் மூத்த எம்பி கே.சி. வேணுகோபால், "இந்த மசோதா தாக்கல் செய்யப்படுவதை காங்கிரஸ் கட்சி எதிர்க்கிறது. நாங்கள் மகளிர் இட ஒதுக்கீட்டை ஆதரிக்கிறோம். ஆனால், தொகுதி மறுவரையறை மசோதாவை எதிர்க்கிறோம். மத்திய அரசு தற்போது எடுத்து வரும் நடவடிக்கை என்பது இந்திய அரசியல் சாசனத்தின் அடிப்படை மீதான தாக்குதல். மகளிருக்கு இட ஒதுக்கீடு வழங்கும் மசோதா கடந்த 2023–ம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது. அப்போது மத்திய அரசு, மக்கள் தொகை கணக்கெடுப்பு நடந்த பிறகே தொகுதி மறு சீரமைப்பு மேற்கொள்ளப்படும். அதன் பிறகே இந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என அறிவித்தது. அவ்வாறு இருக்க, இப்போது எதற்கு தொகுதி மறுவரையறையை மேற்கொள்ள மத்திய அரசு முயல்கிறது" என கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதில் அளித்த மத்திய அமைச்சர் கிரண் ரிஜிஜு, "மசோதா தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பாக அதை எதிர்ப்பதாக இருந்தால் பிரிவு 72–ன் கீழ் தொழில்நுட்ப காரணங்களுக்காக மட்டுமே எதிர்க்க முடியும். தொழில்நுட்ப பிரச்சினை ஏதும் இல்லாத நிலையில் மசோதா தாக்கல் செய்வதை எதிர்க்க முடியாது" என கூறினார்.

இதைத் தொடர்ந்து பேசிய சமாஜ்வாதி கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ், "மகளிர் இட ஒதுக்கீட்டு மசோதாவில் முஸ்லிம் பெண்களுக்கு உள் இட ஒதுக்கீடு வழங்கப்படுமா?" என கேள்வி எழுப்பினார். இதற்கு பதில் அளித்த அமித் ஷா, "மத ரீதியாக இட ஒதுக்கீடு வழங்குவது என்பது அரசியல் சாசனத்துக்கு எதிரானது. எனவே, முஸ்லிம் பெண்களுக்கு உள் இட ஒதுக்கீடு என்ற கேள்விக்கே இடமில்லை" என பதில் அளித்தார்.

அதற்கு, "எஸ்சி. எஸ்டி பெண்களுக்கு உள் இட ஒதுக்கீடு அளிக்கப்படுமா?" என அகிலேஷ் யாதவ் கேள்வி எழுப்பினார்.

அதற்கு பதில் அளித்த அமித் ஷா, "தற்போது மக்கள் தொகை கணக்கு எடுக்கும் பணி தொடங்கப்பட்டு விட்டது. முதற்கட்டமாக வீடுகள் குறித்த கணக்கெடுப்பு நடக்கிறது. தொடர்ந்து சாதி வாரி கணக்கெடுப்பு நடத்தப்படும்" என பதில் அளித்தார்.

தொடர்ந்து மசோதாவை அறிமுகம் செய்ய அவையில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. மசோதா அறிமுகத்துக்கு ஆதரவாக 207 எம்பிக்கள் வாக்களித்தனர். எதிராக 126 எம்பிக்கள் வாக்களித்தனர். இதன்மூலம், மசோதாவை அறிமுகம் செய்வதற்கு அதிக ஆதரவு இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது.

இந்த மசோதாக்கள் மீது பிற்பகல் 3 மணியளவில் பிரதமர் மோடி உரையாற்றவிருக்கிறார்.

# தொகுதி மறுவரையறைக்கு எதிர்ப்பு: கருப்புக்கொடி ஏற்றி முதல்வர் ஸ்டாலின் போராட்டம்!

நாமக்கல், ஏப். 16–

தொகுதி மறுவரையறைக்கு எதிர்ப்பு தெரிவித்து, நாமக்கல் திமுக நிர்வாகி இல்லத்தின் முன் கருப்புக்கொடி ஏற்றியும், தொகுதி மறுவரையறை திட்ட நகலை எரித்தும் முதல்வர் ஸ்டாலின் போராட்டம் நடத்தினார்.



தொகுதி மறுவரையறை என்ற பெயரில் தன் லிமிட்டை தாண்டி, தமிழகம் உள்ளிட்ட தென் மாநிலங்களை பா.ஜ., அரசு வஞ்சிக்கிறது.

இன்று கொண்டு வரும் சட்டத் திருத்தத்தால், பெயரளவுக்கு தமிழகம் உள்ளிட்ட தென் மாநிலங்களுக்கு தொகுதியை அதிகரிக்கிறோம் என சொல்லிவிட்டு, அவர்களுக்கு சாதகமான வட மாநிலங்களுக்கு, மிக கூடுதலாக தொகுதிகளை அதிகரிக்கின்றனர் என முதல்வர் ஸ்டாலின் குற்றம் சாட்டி இருந்தார்.

அவர், 'தொகுதி மறுவரையறைக்கு எதிர்ப்பு தெரிவித்து, தமிழகம் முழுவதும் இன்று கருப்புக் கொடி போராட்டம் நடத்தப்படும்' என அறிவித்து இருந்தார். அதன் படி, நாமக்கல் திமுக நிர்வாகி இல்லத்தின் முன் கருப்புக்கொடி ஏற்றியும், தொகுதி மறுவரையறை திட்ட நகலை எரித்தும் முதல்வர் ஸ்டாலின் போராட்டம் நடத்தினார். மாநிலங்களின் உரிமைகளை பறிக்க கூடாது என முதல்வர் ஸ்டாலின் உள்ளிட்ட திமுகவினர் கோஷம் எழுப்பினர். சென்னை மதிமுக அலுவலகம், அண்ணா அறிவாலயம், முதல்வர் இல்லம் உள்ளிட்ட இடங்களில் கருப்புக்கொடி ஏற்பட்டு உள்ளது.

**தீ பரவட்டும்!**

இது குறித்து முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பாவது: தொகுதி மறுவரையறைக்கு தமிழகமெங்கும் எதிர்ப்புத் தீ பரவட்டும். பாஜவின் ஆணவம் வீழட்டும். அன்று, தமிழகத்தில் பற்றத் தொடங்கிய ஹிந்தி எதிர்ப்புத் தீ டில்லியைச் சுட்டெரித்தது. டில்லி பணிந்த பின்பே எங்கள் தீ தணிந்தது.

இன்று, தமிழரைச் சொந்த நாட்டில் அகதிகளாக்கும் கருப்புச் சட்டத்தின் நகலை எரித்து மற்றுமொரு தீயினைப் பற்ற வைத்திருக்கிறேன். இத்தீயும் திராவிட நாடெங்கும் பரவும். பாஜவின் ஆணவத்தை அடக்கிக் காட்டும். 'தமிழ் எங்கள் பிறவிக்குத் தாய் – இன்பத் தமிழ் எங்கள் வளமிக்க உளமுற்ற தீ. இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.

# 30 நாட்கள் முடிந்தது.. ரஷியா, ஈரானிடம் இருந்து எண்ணெய் வாங்க அனுமதி நீட்டிக்கப்படாது - அமெரிக்கா!

அமெரிக்கா, ஏப். 16–

அமெரிக்கா – இஸ்ரேல் – ஈரான் போரினால் மத்திய கிழக்கில் ஏற்பட்ட பதற்றத்தால் உலக நாடுகளில் கச்சா எண்ணெய் தட்டுப்பாடு ஏற்பட்டு பெட்ரோல், டீசல் விலை உயர்ந்தது. மேலும் எல்பிஜி உள்ளிட்ட எரிவாயு பொருட்களுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டது.




மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி பாதையாக உள்ள ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் முடியாதே இந்த தட்டுப்பாடுகளுக்கு காரணம்.

இந்தியாவில் எரிபொருள் மற்றும் கச்சா எண்ணெய் கையிருப்பு குறைந்து வருவதால் ரஷியா தனது எண்ணெய்யை கூடுதலாக கொடுக்க முன்வந்தது.

ஆனால் அண்மையில் அமெரிக்காவுடன் செய்து கொண்ட வர்த்தக ஒப்பந்தத்தில் ரஷியாவிடம் எண்ணெய் வாங்க மாட்டோம் என இந்தியா வாக்குறுதி அளித்திருந்தது.

இதற்கிடையே போர் நெருக்கடி நிலையை கருத்தில் கொண்டு இந்தியா 30 நாட்களுக்கு மட்டும் ரஷிய எண்ணெய் வாங்க அனுமதி அளிப்பதாக அமெரிக்கா அறிவித்தது. மேலும் ஈரான் எண்ணெய் வாங்கவும் அனுமதி வழங்கியது.

2019 இல் அமெரிக்க தடையால் ஈரானிடம் கச்சா எண்ணெய் வாங்குவதை நிறுத்திய அமெரிக்கா, சமீபத்திய அனுமதியால் 7 ஆண்டுகளுக்கு பின் ஈரானிடம் கச்சா எண்ணெய் வாங்கியதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. ஈரானின் கச்சா எண்ணையுடன் 2 கப்பல்கள் அண்மையில் இந்தியா வந்து சேர்ந்தன.

ஆனால் அமெரிக்கா வழங்கிய 30 நாள் அனுமதி கடந்த ஏப்ரல் 11 ஆம் தேதியுடன் காலாவதியானது. இதனால் கச்சா எண்ணெய் வாங்கலாமா, வேண்டாமா என்ற குழப்பம் நிலவியது.

இந்நிலையில் அமெரிக்க தலைநகர் வாஷிங்டனில் செய்தியாளர்களிடம் பேசிய அந்நாட்டு கருவூல செயலாளர் ஸ்காட் பெசன்ட், 'ரஷியா மற்றும் ஈரான் கச்சா எண்ணெய்யை வாங்குவதற்கு அளிக்கப்பட்ட அனுமதியை அமெரிக்கா நீட்டிக்காது' என்று திட்டவட்டமாக தெரிவித்தார்.

முன்னாதாக ஸ்காட் பெசன்ட், இந்தியர்கள் எங்கள் சிறந்த கூட்டாளிகள், நல்ல நடிகர்கள், முன்னர் நாங்கள் சொன்னதுபோல் ரஷிய எண்ணெய்யை வாங்குவதை நிறுத்தினார்கள் என்பதால் இந்த சலுகையை தற்காலிகமாக வழங்க முன்வந்தாக கூறியிருந்தது சரசையானது குறிப்பிடத்தக்கது.

# தலையங்கம்

மதுரை மணி

வியாழக்கிழமை 16.04.2026

விசுவாவசு தமிழ் வருடம்

சித்திரை மாதம் 03-ம் தேதி

## அமெரிக்கா செய்யும் சேட்டை... இந்தியாவை பாதிக்குமா?




இஸ்ரேல் – அமெரிக்கா இணைந்து கடந்த பிப்ரவரி 28ஆம் தேதி முதல் ஈரான் மீது தாக்குதல் தொடுத்து வருகிறது.

ஈரான் – அமெரிக்கா இடையே போர் நிறுத்தம் ஏற்பட்டாலும், இஸ்ரேல் லெபனான் மீதான தாக்குதலை தீவிரப்படுத்தியது. மேலும், பாகிஸ்தானில் நடந்த ஈரான் – அமெரிக்கா இடையேயான பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்ததும் பதற்றத்தை அதிகப்படுத்தியது.

**இந்தியாவில் என்ன நடக்கும்?**

பேச்சுவார்த்தை தோல்விக்கு பின், ஹார்முஸ் ஜலசந்தியை அமெரிக்கா சுற்றிவளைத்திருப்பது மேற்கு ஆசியாவில் பதற்றத்தை அதிகப்படுத்தி உள்ளது. இதனால் உலக ஒழுங்கு மேலும் சீர்கெடுவதை பார்க்க முடிகிறது.

மேற்கு ஆசியாவில் பதற்றம் அதிகரிப்பது நிச்சயம் இந்தியா போன்ற மூன்றாம் தர நாடுகளுக்கு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். அதுவும் இந்தியா போன்ற நாடுகளில் எல்பிஜி, பெட்ரோல், டீசல் உள்ளிட்டவற்றின் விலை இன்னும் சில நாள்களில் உயர்ந்துவிடுமா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

**ஹார்முஸ் ஜலசந்தியை சுற்றிவளைத்த அமெரிக்கா:**

வளைகுடா நாடுகள் உள்பட மற்ற நாடுகளில் இருந்துதான் இந்தியா எரிவாயு மற்றும் கச்சா எண்ணெய்யை அதிகம் இறக்குமதி செய்து வருகிறது, இது இந்திய அரசின் மீது அழுத்தத்தை அதிகரிக்கச் செய்துள்ளது. போர் தொடங்கியதில் இருந்து ஹார்முஸ் ஜலந்தி வழியாக ஒரு சில இந்திய கப்பல்கள் மட்டும் அரசின் பேச்சுவார்த்தையின் பலனால் அனுமதிக்கப்பட்டன.

ஆனால், தற்போது இருதரப்பு பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்திருப்பதாலும், ஹார்முஸ் ஜலசந்தியை சுற்றிவளைத்து அமெரிக்க முடக்கும்பட்சத்தில், நிச்சயம் கச்சா எண்ணெய்யின் விலை அதிகரிக்கும். எனவே, இதனால் மத்திய அரசுக்கு எரிபொருள் விலையை அதிகரிக்க வேண்டிய அழுத்தம் உருவாகும்.

**எல்பிஜி விலை எவ்வளவு?**

ஈரான் – இஸ்ரேல் – அமெரிக்கா இடையே போர் வெடித்த பின்னர் வணிக ரீதியான எல்பிஜி சிலிண்டரின் விலை தொடர்ச்சியாக உயர்ந்து வருகிறது, அதன் டிமாண்டும் அதிகமாகி வருகிறது. அதிகாரப்பூர்வமாக ஏப்ரல் 1ஆம் தேதி அன்று வணிக ரீதியான எல்பிஜி சிலிண்டரின் விலை 195 ரூபாயில் இருந்து 218 ரூபாய் வரை உயர்ந்தது. இதனால், வணிக ரீதியான எல்பிஜி சிலிண்டரின் விலை சென்னையில் 2,246.50 ரூபாய்க்கும், டெல்லியில் 2,078.50 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது.

5 கிலோ சிலிண்டர் விலையும் ரூ.51 அளவுக்கு உயர்ந்துள்ளது. மார்ச் 7ஆம் தேதி அன்று வீட்டு உபயோக எல்பிஜி சிலிண்டர் விலை சென்னையில் ரூ.60 அளவுக்கு உயர்ந்து, ரூ.928.50 ஆக விற்கப்பட்டு வருகிறது. இருப்பினும் பெட்ரோல், டீசல் விலையில் மாற்றம் ஏதும் கிடைக்கவில்லை. பெட்ரோல் ஒரு லிட்டர் ரூ.100.85 ஆகவும், டீசல் ஒரு லிட்டர் ரூ.92.40 ஆகவும் விற்கப்பட்டு வருகிறது.

**சுமையை தாங்குமா அரசு?**

போர் தொடங்கியபோது ஒரு பேரல் கச்சா எண்ணெய்யின் விலை சர்வதேச சந்தையில் 70 அமெரிக்க டாலராக இருந்தது. தற்போது ஒரே பேரல் 100 அமெரிக்க டாலரை நெருங்கி வருகிறது. இவை ஃபியூச்சர்ஸ் மார்க்கெட்டின் விலை நிலவரம் ஆகும். இவை மூன்று மாத டெலிவரிக்கானதுதான். ஸ்பாட் மார்க்கெட்டில் கச்சா எண்ணெய்யின் விலை 130–140 அமெரிக்க டாலராகும். எனவே, இந்த கச்சா எண்ணெய் விலை உயர்வு, எண்ணெய் நிறுவனங்கள் எரிபொருளின் விலையை உயர்த்த பெரும் அழுத்தத்தை கொடுக்கிறது.

இருப்பினும், நிறுவனங்களின் அழுத்தத்தை குறைக்க பெட்ரோல் மீதான கலால் வரியை 10 ரூபாய் அளவிற்கு மத்திய அரசு குறைத்தது. தொடர்ந்து, டீசல் மீதான கலால் வரியை முற்றிலும் நீக்கியது. இருப்பினும் Nayara மற்றும் Shell India நிறுவனங்கள் அதன் பெட்ரோல், டீசல் விலையை உயர்த்தி உள்ளன. எனவே, மற்ற எண்ணெய் நிறுவனங்களும், அரசும் எத்தனை காலம் இந்த சுமையை தாங்கிக் கொண்டு பொறுமைக்காக்கும் என்பது தெரியாது.

போர் நீண்டாலும், மத்திய கிழக்கு நாடுகளில் போர் பதற்றம் அதிகமானாலும், ஹார்முஸ் ஜலசந்தியை கடந்து எண்ணெய் கப்பல்கள் வருவதற்கு தடை ஏற்பட்டாலும் நிச்சயம் இந்திய அரசு பெட்ரோல், டீசல் விலையை உயர்த்த வேண்டிய கட்டாயம் ஏற்படும்.


**விலை அதிகரிக்க வாய்ப்பு;**

ஏற்கெனவே ஈரான் ஹார்முஸ் ஜலசந்தியில் கப்பல் போக்குவரத்தை கட்டுப்படுத்தி வரும் நிலையில், தற்போது அமெரிக்காவும் அதனை முழுமையாக முடக்கும் நடவடிக்கையில் இறங்கியிருப்பது பெரும் தலைவலிதான். போருக்கு முன் ஒருநாளைக்கு 10 கப்பல்கள் இங்கு கடந்த நிலையில், போருக்கு பின் 2 நாள்களில் 2 கப்பல்கள் கடக்கும் நிலைதான் தற்போது உள்ளது. அமெரிக்காவின் சமீபத்திய நடவடிக்கை இதை மேலும் மோசமாக்கி உள்ளது.

**தேர்தலுக்கு பின்...**

மே 15ஆம் தேதியுடன் நமது இருப்புகள் குறையும் நிலையில், பெட்ரோல், டீசல், எல்பிஜி உள்ளிட்ட எரிபொருள்களின் விலையும் அதிகரிக்கும் சூழல் ஏற்படலாம். தற்போது 5 மாநில தேர்தல் நடைபெறும் காரணத்தாலேயே போர் சூழலிலும் மத்திய அரசு பெட்ரோல், டீசல், LPG விலையை ஏற்றாமல் உள்ளது. நிச்சயம் தேர்தல் முடிந்ததும் விலையை ஏற்ற வாய்ப்புள்ளது என கூறப்படுகிறது.

## மதுரை மீனாட்சி-சுந்தரேஸ்வரர் திருக்கல்யாணம்: 19-ம் தேதி டிக்கெட் முன்பதிவு தொடக்கம்!



மதுரை, ஏப். 16–

மதுரை மீனாட்சி அம்மன் கோவில் இணை கமிஷனர் சுரேஷ் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

உலக புகழ்பெற்ற மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் சித்திரை திருவிழா வருகிற 19–ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி 30–ம் தேதி நிறைவு பெறுகிறது. விழாவில் முக்கிய விழாவான மீனாட்சி–சுந்தரேஸ்வரர் திருக்கல்யாணம் வருகிற ஏப்ரல் 28–ம் தேதி செவ்வாய்க்கிழமை (சித்திரை 15–ம் தேதி) கோவிலின் வடக்கு, மேற்கு ஆடி வீதியில் உள்ள திருக்கல்யாண மண்டபத்தில் காலை 8.35 மணிக்கு மேல் 8.59 மணிக்குள் நடைபெற உள்ளது. திருக்கல்யாணத்தை காண வரும் பக்தர்களின் வசதிக்காக ரூ.200, ரூ.500 கட்டண சீட்டுகள் வைத்திருப்பவர்கள் வடக்கு கோபுரம் வழியாகவும், பக்தர்கள் கட்டணமில்லா தரிசன முறையில் முதலில் வருபவர்களுக்கே அனுமதி என்ற முறையிலும் தெற்கு கோபுரம் வழியாகவும் அனுமதிக்கப்பட உள்ளனர்.

திருக்கல்யாணத்திற்கான கட்டணச்சீட்டு முன்பதிவு செய்யும் வசதி கோவில் இணையதளமான madurai–meenakshi.hrce.tn.gov.in மற்றும் இந்து சமய அறநிலையத்துறை இணையதளமான hrce.tn.gov.in ஆகியவற்றில் வருகிற 19–ம் தேதி முதல் 22–ம் தேதி இரவு 9 மணி வரை ஏற்படுத்தப்பட்டு உள்ளது. ஒரு நபரால் ரூ.500 கட்டண சீட்டு 2 மட்டுமே பெற முடியும். ரூ.200 கட்டண சீட்டை ஒருவர் 3 வரை பெறலாம். ஆனால் ஒரே நபர் ரூ.500, ரூ.200 கட்டண சீட்டை பெற முடியாது. பிறந்த தேதி சரியாக பூர்த்தி செய்து இருக்க வேண்டும். ஒரு பதிவுக்கு ஒரு அலைபேசி எண் மட்டுமே பயன்படுத்த முடியும். பாதுகாப்பு கருதி திருக்கல்யாணத்தன்று குழந்தைகளை அழைத்து வருவதை தவிர்க்கவும்.

மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்கு சொந்தமான எல்லீஸ்நகரில் அமைந்துள்ள யாத்ரி நிவாஸ் தங்கும் விடுதியில் ரூ.500, ரூ.200 கட்டண சீட்டை 19–ம் தேதியில் இருந்து நேரில் வந்து பதிவு செய்து கொள்ளலாம். ஆதார் நகல், புகைப்படத்துடன்கூடிய அடையாள சான்று, அலைபேசி எண், இ–மெயில் முகவரி அவசியம். கூடுதல் எண்ணிக்கையில் முன்பதிவு செய்திருந்தால் குலுக்கல் முறையில் தேர்வு செய்து அலைபேசி, இ–மெயிலில் 23–ம் தேதி அன்று தகவல் தெரிவிக்கப்படும்.

பக்தர்கள் 24–ம் தேதி முதல் 27–ம் தேதி வரை காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை எல்லீஸ் நகரில் அமைந்துள்ள யாத்ரி நிவாஸ் தங்கும் விடுதியில், தங்களுக்கு வந்த எஸ்.எம்.எஸ்., இ–மெயிலை காண்பித்து பணம் செலுத்தி திருக்கல்யாண கட்டண சீட்டை பெறலாம். ரூ.500 மதிப்பிலான கட்டணச்சீட்டு பெற்றவர்கள் வடக்கு மொட்டை முனீஸ்வரர் சன்னதி அருகில் உள்ள வழியிலும், ரூ.200 கட்டண சீட்டு பெற்றவர்கள் வடக்கு, கிழக்கு சித்திரை வீதி சந்திப்பு அருகே அமைக்கப்பட்டுள்ள பாதை வழியாகவும் வடக்கு கோபுரம் பகுதியில் அனுமதிக்கப்படுவார்கள். திருக்கல்யாண டிக்கெட் பெற்றவர்கள் அன்று காலை 5 மணியில் இருந்து 7 மணிக்குள் அவர்களுக்கான ஒதுக்கீடு செய்யப்பட்ட இடத்தில் அமர்ந்து இந்த திருக்கல்யாணத்தை பார்க்கலாம். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## வாகனங்களுக்கான எரிவாயு தட்டுப்பாடு.. ஒரு கிலோ மீட்டர் தூரத்திற்கு அணிவகுத்து நிற்கும் ஆட்டோக்கள்!



சென்னை, ஏப். 16–

140 கோடி மக்கள்தொகையை கொண்ட இந்தியாவின் எல்.பி.ஜி. கியாஸ் தேவையில் 60 சதவீதம் இறக்குமதி வாயிலாகவே பூர்த்தி செய்யப்படுகிறது. ஈரான் – இஸ்ரேல் போருக்கு முன்பு எல்.பி.ஜி. இறக்குமதியில் 90 சதவீதம் ஹார்முஸ் ஜலசந்தி வழியாகவே பெறப்பட்டது. தற்போது, அந்த கடல் வழித்தடத்தில் கப்பல் போக்குவரத்து தடைபட்டுள்ளதால், இறக்குமதி அளவு 55 சதவீதமாக குறைந்துள்ளது. இதன் காரணமாக, இந்தியாவின் எரிவாயு இறக்குமதி மற்றும் விலை மீதான அழுத்தம் அதிகரித்து வருகிறது. பற்றாக்குறையை சமாளிக்க மாற்று வழிகளை மத்திய அரசு ஆராய்ந்து வருகிறது. இந்த சூழலில் வாகனங்களுக்கான எல்.பி.ஜி., சி.என்.ஜி. எரிவாயுக்கள் கிடைக்காததால், ஓட்டுநர்கள் கடும் அவதியடைந்து வருகின்றனர்.

சென்னை நகரில் பல்லாயிரக்கணக்கான ஆட்டோக்கள், கால்டாக்சிகள் எல்.பி.ஜி. மற்றும் சி.என்.ஜி. எரிவாயுவை பயன்படுத்தி இயக்கப்படுகின்றன. அதேபோல், பல சிறு வணிக வாகனங்கள் மற்றும் பொது போக்குவரத்துக்கான பஸ்களும் தற்போது சி.என்.ஜி. எரிவாயுவில் இயக்கப்படுகின்றன. அதிகரித்து வரும் பெட்ரோல், டீசல் விலை உயர்வால் பலர் தங்கள் வாகனங்களின் கட்டமைப்பை எல்.பி.ஜி. மற்றும் சி.என்.ஜி. எரிவாயு மூலம் இயக்கும் வகையில் மாற்றி அமைத்திருந்தனர்.

வணிக ரீதியிலான சமையல் எரிவாயு உருளைக்கு ஏற்கெனவே தட்டுப்பாடு நிலவி வந்தாலும், வாகனங்களுக்கான எல்.பி.ஜி. எரிவாயு பல இடங்களில் கிடைத்து வந்தது. ஆனால், கடந்த சில நாட்களாக வாகனங்களுக்கான எரிவாயு கிடைப்பதிலும் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதனால், வாடகை வாகன ஓட்டுநர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். எரிவாயு நிரப்பும் நிலையங்கள் தற்காலிகமாக மூடப்பட்டதால் ஆட்டோ ஓட்டுநர்கள் அவதி அடைந்துள்ளனர். மேலும் ஒரு சில இடங்களில் எரிவாயு நிரப்புவதற்காக நீண்ட நேரம் காத்திருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. எரிவாயு நிரப்ப தினமும் 2 முதல் 3 மணி நேரம் வரை காத்திருப்பதாக ஆட்டோ ஓட்டுநர்கள் வேதனை தெரிவித்துள்ளனர்.

சென்னை மட்டுமல்லாது தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும், பெட்ரோல் பங்குகளில் கியாஸ் நிரப்ப நீண்ட வரிசையில் ஆட்டோக்கள் அணிவகுத்து நிறுத்தப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## எடப்பாடி, பியூஸ் கோயல், அண்ணாமலை ஆலோசனை!



நாகர்கோவில்,ஏப். 16–

நாகர்கோவிலில் நேற்று மாலை நடைபெற்ற பிரதமர் மோடியின் ரோடு ஷோ நிகழ்ச்சியில், அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி பங்கேற்றார். இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக எடப்பாடி பழனிசாமி நேற்று காலை மதுரையில் இருந்து விமானம் மூலமாக தூத்துக்குடி வந்து, பின்னர் அங்கிருந்து ஹெலிகாப்டர் மூலம் கன்னியாகுமரிக்கு வருகை தந்தார். கன்னியாகுமரி வந்திறங்கிய அவரை, அதிமுக கிழக்கு மாவட்ட செயலாளரும், எம்.எல்.ஏவுமான தளவாய் சுந்தரம், முன்னாள் அமைச்சர் பச்சைமால் உள்ளிட்டோர் வரவேற்றனர். தொடர்ந்து, கன்னியாகுமரியில் இருந்து கார் மூலம் நாகர்கோவில் வந்த எடப்பாடி பழனிசாமி, அங்கு ஓட்டலில் ஓய்வெடுத்தார்.

இதே ஓட்டலில். ஒன்றிய அமைச்சர் பியூஸ் கோயல், அண்ணாமலை உள்ளிட்டோரும் தங்கி இருந்தனர். மூவரும் தேர்தல் பணிகள் தொடர்பாக ஆலோசனை மேற்கொண்டதாக கூறப்படுகிறது. முன்னதாக நாகர்கோவில் ஓட்டலுக்கு வந்த எடப்பாடி பழனிச்சாமியிடம் நிருபர்கள் பேட்டி கேட்டனர். அப்போது அவர் தனக்கு தொண்டை வலிப்பதாகவும் பேட்டி எதுவும் வேண்டாம் என சைகை மூலம் கூறி சென்றார்.

## 2030-ம் ஆண்டுக்குள் சூரிய சக்தி மூலம் 20 ஆயிரம் மெகாவாட் மின் உற்பத்தி: தமிழக அரசு திட்டம்!




சென்னை, ஏப். 16–

தமிழக மின்சார தேவையை பூர்த்தி செய்வதற்காக அனல், புனல், நீர் மற்றும் கியாஸ் மின்சார நிலையங்களில் மின்சார உற்பத்தி செய்யப்பட்டு வினியோகிக்கப்பட்டு வருகிறது. இதுதவிர காற்றாலை மற்றும் சூரிய சக்தி மூலமும் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. சராசரியாக தற்போது 19 ஆயிரம் மெகாவாட் தேவைப்பட்டு வருகிறது.


அடுத்த மாதம் வெப்பத்தின் தாக்கம் அதிகமாக இருக்கும் என்பதால் தேவையும் 20 முதல் 22 ஆயிரம் மெகாவாட் வரை தேவைப்படும் என்பதால் தனியாரிடமும் மின்சாரம கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. புதுப்பிக்கத்தக்க ஆற்றலை ஊக்குவிக்கும் வகையில், 2030–ம் ஆண்டுக்குள் 20 ஆயிரம் மெகாவாட் திறனை எட்டுவதற்காக சூரிய மின்சார நிலையங்களை நிறுவ தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் ரூ.70 ஆயிரம் கோடியில் திட்டமிட்டு, அனைத்து மாவட்டங்களையும் சூரிய மின்சக்தி மாவட்டங்களாக மாற்ற நடவடிக்கை எடுத்து வருகிறது.

குறிப்பாக, நிலக்கரி மின்சாரத்தைக் குறைத்து, சூரிய ஒளி மற்றும் காற்றாலை போன்ற புதுப்பிக்கத்தக்க ஆற்றலுக்கு தமிழ்நாடு முக்கியத்துவம் அளிக்கிறது. தமிழகத்தில் கடந்த மாதம் சூரிய மின்சார உற்பத்தி 5.48 கோடி யூனிட்களைத் தொட்டு புதிய சாதனை படைத்துள்ளது. தற்போது வெயில் அதிகரிப்பால் மின்சார நுகர்வு உச்சத்தில் இருந்தாலும், சூரிய சக்தி உற்பத்தி அதிகரிப்பு மின்சார வினியோகத்திற்கு உதவியாக உள்ளது.

இருப்பினும், அதிகரித்து வரும் சூரிய மின்சார உற்பத்தியை மின்சார கட்டமைப்பில் (கிரிட்) ஏற்பதில் போதிய கட்டமைப்பு வசதிகள் இல்லாததால், சில நேரங்களில் உற்பத்தி நிறுத்தப்படும் சவால்களும் நிலவுகின்றன என்று மின்சார வாரிய அதிகாரிகள் கூறினர்.



## அட்சய திரிதியில் அரிதான 3 சக்திவாய்ந்த யோகங்கள்; யாருக்கு அதிர்ஷ்டம்..?




இந்த ஆண்டு அட்சய திரிதியை அன்று, சூரியனும் சந்திரனும் உச்ச நிலையில் இருப்பார்கள். இது மிகவும் அரிதான ஒரு நிகழ்வாகும். இது சுப பலன்களை மேலும் அதிகரிக்கும் என்று நம்பப்படுகிறது. சாதாரண பூஜைகள் மற்றும் பொருட்கள் வாங்குதல் கூட சிறந்த பலன்களைத் தரும் என்றும் நம்பப்படுகிறது.

இந்த முறை, கஜகேசரி யோகம், மாளவிய யோகம் மற்றும் அட்சய யோகம் ஆகிய மூன்று யோகங்களும் ஒரே நேரத்தில் உருவாகும். இந்த மூன்று யோகங்களும் ஒன்றாக அமைவது மிகவும் அரிதானது. இவை குறிப்பாக செல்வம், வேலை, தொழில் மற்றும் மரியாதை ஆகியவற்றை அதிகரிக்க உதவும் என்று ஜோதிடம் கூறுகிறது.

**மேஷ ராசிக்காரர்களுக்கு பொன்னான வாய்ப்பு:** இந்த அட்சய திரிதியா மேஷ ராசிக்காரர்களுக்கு நல்ல வாய்ப்புகளைக் கொண்டு வரும். உங்கள் வேலையில் முன்னேற்றத்தைக் காண்பீர்கள். புதிய வேலை கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது. உங்கள் கடின உழைப்புக்கு பலன் கிடைக்கும். உங்கள் மேலதிகாரிகள் உங்கள் பணியை அங்கீகரிப்பார்கள். தொழிலதிபர்களுக்குப் புதிய வாடிக்கையாளர்கள் கிடைப்பார்கள், மேலும் அவர்களின் லாபம் அதிகரிக்கும்.

**தனுசு மற்றும் ரிஷப ராசியினருக்கு நிதி நன்மைகள்:** தனுசு ராசிக்காரர்கள் தங்கள் ஆசைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கான நேரம் இது. உங்களுக்கு வீடு வாங்கும் கனவு இருந்தால், அது நனவாகும் வாய்ப்புள்ளது. கலை மற்றும் படைப்புத் துறைகளில் இருப்பவர்கள் புகழையும் பணத்தையும் பெறுவார்கள். வேலையில் பதவி உயர்வும், சம்பள உயர்வும் ஏற்பட வாய்ப்புள்ளது.

**ரிஷப ராசிக்காரர்களுக்கு புதிய வருமான வழிகள் உருவாகும்.** பணப் பிரச்சனைகள் குறையத் தொடங்கும். உங்கள் உழைப்பு பாராட்டப்படும். உங்கள் மேலதிகாரிகளிடமிருந்து ஆதரவு கிடைக்கும். சம்பள உயர்வுக்கான வாய்ப்புகள் உள்ளன.

**துலாம் ராசிக்காரர்களிடம் சொத்துக்களும் மரியாதையும் அதிகரிக்கும்:** துலாம் ராசிக்காரர்களுக்கு மிகவும் சுபமான அறிகுறிகள் தென்படும். வீடு அல்லது சொத்து வாங்கும் திட்டங்கள் வெற்றி பெறலாம். சமூகத்தில் மரியாதை அதிகரிக்கும். உங்கள் வார்த்தைகளின் மதிப்பு உயரும். வியாபாரத்தில் விரைவான வளர்ச்சி காணப்படும்.

ஒட்டுமொத்தமாக, கிரகங்களின் சிறப்பு நிலைகள் காரணமாக 2026 ஆம் ஆண்டின் அட்சய திரிதியை பல சுப பலன்களைத் தரப்போகிறது. குறிப்பாக சில ராசிகளுக்கு, இது வாழ்க்கையில் புதிய மாற்றங்கள் ஏற்படுவதற்கான நேரமாக இருக்கலாம். இந்த நாளில் சுப காரியங்களைத் தொடங்குவது நல்லது என்று கருதப்படுகிறது.

## சினிமா துளிகள்..!

### திரைப்படமாகும் தமிழ்நாட்டை உலுக்கிய விளாத்திகுளம் சம்பவம்!




தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் அருகே வேடநத்தம் கிராமத்தில் பள்ளி மாணவி ஒருவர் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு, கொலை செய்யப்பட்ட சம்பவம் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

தமிழ்நாட்டையே உலுக்கிய இந்த உண்மை சம்பவம் சினிமா படமாகிறது. இம்மானுவேல் அரசர் பிலிம்ஸ் சார்பில் சாமுவேல் சார்ஜ் தயாரிக்க, 'யோகிடா' படத்தை இயக்கிய கவுதம் கிருஷ்ணா டைரக்டு செய்கிறார். முன்னணி நடிகர்–நடிகைகள் நடிக்கும் படத்தின் முதற்கட்ட படப்பிடிப்பும் நடந்து முடிந்திருக்கிறது. இரண்டாம் கட்ட படப்பிடிப்பை விளவங்கோடு மற்றும் அதன் சுற்று வட்டார பகுதிகளில் நடத்திட திட்டமிடப்பட்டு இருக்கிறது. ஜூலை மாதம் படம் திரைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### 'ஜனநாயகன்' திரைப்படம் வெளியானது குறித்து ஐகோர்ட்டில் முறையீடு!



'ஜனநாயகன்' திரைப்படம் அண்மையில் இணையதளங்களில் சட்டவிரோதமாக வெளியானது. இந்த திரைப்படம் வெளியானது குறித்து வழக்கு தொடரப்படவுள்ளதாகவும், இந்த வழக்கை அவசர வழக்காக விசாரிக்கவேண்டும் என்று சென்னை ஐகோர்ட்டு நீதிபதி செந்தில்குமார் ராமமூர்த்தியிடம் பட தயாரிப்பு நிறுவனம் சார்பில் முறையிடப்பட்டது. அதற்கு நீதிபதி, வழக்கு தாக்கல் செய்தால், விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று கூறினார்.

# நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



## குறைந்த இரத்த அழுத்தம் உடலில் என்ன மாதிரியான பிரச்சனைகளை ஏற்படுத்தும்..?



இதயம் உடலுக்கு இரத்தத்தை உந்தித் தள்ளும்போது, இரத்த நாளங்களின் சுவர்களில் செலுத்தப்படும் அழுத்தமே இரத்த அழுத்தம் ஆகும். சாதாரணமாக, இது 120/80 mmHg ஆக இருக்க வேண்டும். இருப்பினும், இது 90/60 mmHg–க்கும் குறைவாக இருந்தால், அது குறைந்த இரத்த அழுத்தம் (Low BP அல்லது ஹைபோடென்ஷன்) எனக் கருதப்படுகிறது. சிலருக்கு எந்தப் பிரச்சனைகளும் ஏற்படாத நிலையில், மற்றவர்களுக்கு தலைச்சுற்றல், மயக்கம், சோர்வு, மூச்சுத்திணறல் மற்றும் மங்கலான பார்வை போன்ற அறிகுறிகள் ஏற்படுகின்றன.

உடலில் போதுமான நீர்ச்சத்து இல்லாதது நீரிழப்பு மற்றும் குறைந்த இரத்த அழுத்தத்திற்கு வழிவகுக்கும். விபத்து அல்லது உள் இரத்தப்போக்கு காரணமாக அதிக இரத்தம் வெளியேறுவதும் குறைந்த இரத்த அழுத்தத்தை ஏற்படுத்தும். மேலும், சிலர் உயர் இரத்த அழுத்த மருந்துகள், இதய மருந்துகள் அல்லது மனச்சோர்வு மருந்துகளை எடுத்துக்கொள்கிறார்கள், அவை இரத்த அழுத்தத்தைக் குறைக்கக்கூடும். தைராய்டு பிரச்சனைகள், கடுமையான தொற்றுகள் (செப்சிஸ்), இதயப் பிரச்சனைகள் அல்லது அட்ரீனல் சுரப்பி செயலிழப்பு போன்ற உடல்நலக் கோளாறுகளும் இரத்த அழுத்தத்தைக் குறைக்கலாம்.

உடலில் போதுமான நீர்ச்சத்து இல்லாதது நீரிழப்பு மற்றும் குறைந்த இரத்த அழுத்தத்திற்கு வழிவகுக்கும். விபத்து அல்லது உள் இரத்தப்போக்கு காரணமாக அதிக இரத்தம் வெளியேறுவதும் குறைந்த இரத்த அழுத்தத்தை ஏற்படுத்தும். மேலும், சிலர் உயர் இரத்த அழுத்த மருந்துகள், இதய மருந்துகள் அல்லது மனச்சோர்வு மருந்துகளை எடுத்துக்கொள்கிறார்கள், அவை இரத்த அழுத்தத்தைக் குறைக்கக்கூடும். தைராய்டு பிரச்சனைகள், கடுமையான தொற்றுகள் (செப்சிஸ்), இதயப் பிரச்சனைகள் அல்லது அட்ரீனல் சுரப்பி செயலிழப்பு போன்ற உடல்நலக் கோளாறுகளும் இரத்த அழுத்தத்தைக் குறைக்கலாம்.

பொதுவாக, ஒருவருக்கு எந்த அறிகுறிகளும் இல்லாமல் குறைந்த இரத்த அழுத்தம் இருந்தால், அது கவலைக்குரிய விஷயம் அல்ல. இருப்பினும், தலைச்சுற்றல், மயக்கம், சோர்வு, குமட்டல், கண் பிரச்சனைகள், மனக் குழப்பம் மற்றும் சருமம் குளிர்ச்சியாக இருப்பது போன்ற அறிகுறிகள் ஏற்படும்போது குறைந்த இரத்த அழுத்தம் ஆபத்தானதாகிறது. இவை உடலின் உறுப்புகளுக்கு இரத்த ஓட்டம் குறைவாக இருப்பதற்கான அறிகுறிகளாகும். இதுபோன்ற சூழ்நிலைகளில், உடனடியாக மருத்துவரை அணுகுவது அவசியம்.


யாருக்கு அதிக ஆபத்து உள்ளது? வயதாக ஆக, உடலில் உள்ள இரத்த நாளங்கள் கடினமடைவதால், இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்தும் உடலின் திறன் குறைகிறது. ஏற்கனவே இதய நோய், இதய செயலிழப்பு அல்லது வால்வு பிரச்சனைகள் உள்ளவர்களுக்கு, குறைந்த இரத்த அழுத்தம் இதயத்திற்கு மேலும் அழுத்தத்தை ஏற்படுத்தி, மாரடைப்பு ஏற்படும் அபாயத்தை அதிகரிக்கக்கூடும்.

மேலும் நீரிழிவு நோயாளிகளுக்கு இரத்த நாளங்களில் ஏற்படும் பாதிப்பு, இரத்த அழுத்தக் கட்டுப்பாட்டில் குழப்பத்தை ஏற்படுத்தக்கூடும். கடுமையான தொற்றுகள் (செப்சிஸ்) அல்லது அதிர்ச்சியின் போது, இரத்த அழுத்தம் அபாயகரமான அளவிற்கு குறைந்து, முக்கிய உறுப்புகளுக்கான இரத்த ஓட்டம் தடைபடலாம். இது உறுப்பு செயலிழப்புக்கு வழிவகுக்கும். இதுபோன்ற சந்தர்ப்பங்களில் உடனடி மருத்துவ கவனிப்பு அவசியம்.

குறைந்த இரத்த அழுத்தம் உள்ளவர்கள், உடலில் நீர்ப் பற்றாக்குறை ஏற்படாமல் பார்த்துக் கொள்வது மிகவும் அவசியம். தினமும் போதுமான அளவு தண்ணீர் குடிப்பது, இரத்த ஓட்டம் சீராக இருக்க உதவுகிறது. உப்பை மிதமான அளவில், ஆனால் மருத்துவரின் ஆலோசனைப்படி போதுமான அளவில் உட்கொள்ளலாம். ஏனெனில், உப்பு சோடியத்தை அளித்து, இரத்த அழுத்தத்தை சிறிதளவு அதிகரிக்கிறது.

ஒரே நேரத்தில் அதிகமாகச் சாப்பிடுவதை விட, அடிக்கடி சிறிய அளவில் சாப்பிடுவது நல்லது. நீங்கள் இரத்த அழுத்தத்தைக் குறைக்கும் மருந்துகளை உட்கொண்டால், அவற்றின் விளைவுகள் உங்கள் இரத்த அழுத்தத்தை தேவையற்ற முறையில் குறைக்கக்கூடும். எனவே, உங்கள் மருத்துவரிடம் கலந்தாலோசித்து, அந்த மருந்துகளில் தேவையான மாற்றங்களைச் செய்யுங்கள்.

# மத்திய அரசு ஊழியர்களும் ஓய்வூதியதாரர்களும் ஏப்ரலில் 4 குட் நியூஸ்!




புதுடெல்லி, ஏப். 16–

அகவிலைப்படி அதிகரிப்புக்காக காத்திருக்கிறீர்களா? உங்களுக்கு 4 முக்கிய செய்திகள் உள்ளன. சம்பள உயர்வு குறித்த முழுமையான கணக்கீட்டை இந்த பதிவில் காணலாம்.

ஜனவரி 2026 –க்கான அகவிலைப்படி அதிகரிப்பால், மத்திய அரசு ஊழியர்களுக்கு கணிசமான சம்பள உயர்வு கிடைக்கும். தற்போது அகவிலைப்படி 58% ஆக உள்ளது. இதில் 2% அதிகரிப்பு ஏற்பட்டால், அது ஒட்டுமொத்த அகவிலைப்படி அளவை 60% அல்லது அதற்கும் சற்று அதிகமாகக் கொண்டு செல்லக்கூடும்.

**மத்திய அரசு ஊழியர்களும் ஓய்வூதியதாரர்களும்**

அகவிலைப்படி அதிகரிப்புக்கான அறிவிப்புக்காக ஆவலுடன் காத்திருக்கிறார்கள். ஆனால் இதில் ஏற்பட்டு வரும் தாமதம் அனைவரையும் குழப்பத்தில் ஆழ்த்தியுள்ளது. இதற்கான காரணம் என்னவாக இருக்கும் என்ற கேள்வி அனைவருக்கும் உள்ளது.

எனினும், இந்தத் தாமதத்திற்கு எந்த வித நோக்கமும் காரணம் இல்லை என்றும், இது நேரம் தொடர்பான விஷயமாகவே தெரிகிறது என்றும் நிபுணர்கள் கருதுகிறார்கள். அகவிலைப்படி திருத்தங்கள் ஒரு குறிப்பிட்ட சூத்திரத்தின் அடிப்படையில் செய்யப்படுகின்றன. இவை நுகர்வோர் விலைக் குறியீடு–தொழில்துறை ஊதியத்தின் (CPI–IW) 12 மாத சராசரியுடன் இணைக்கப்பட்டுள்ளன. தற்போதைய போக்குகள் சுமார் 2% முதல் 3% வரையிலான ஒரு சிறிய உயர்வே இருக்கும் என சுட்டிக்காட்டுகின்றன.

தற்போது அகவிலைப்படி 58% ஆக உள்ளது. இதில் 2% அதிகரிப்பு ஏற்பட்டால், அது ஒட்டுமொத்த அகவிலைப்படி அளவை 60% அல்லது அதற்கும் சற்று அதிகமாகக் கொண்டு செல்லக்கூடும். எனினும், ஒரு சிறிய சதவீத உயர்வு கூட, கையில் கிடைக்கும் சம்பளத்தில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பை ஏற்படுத்தக்கூடும். அகவிலைப்படி அதிகரிப்புக்கு பிறகு சம்பளம் எவ்வளவு அதிகரிக்கும்? ஒரு சிறிய உதாரணத்தின் மூலம் புரிந்துகொள்ளலாம். உதாரணமாக, ரூ. 18,000 அடிப்படைச் சம்பளம் வாங்கும் நபருக்கு, சம்பளம் மாதத்திற்கு சுமார் ரூ. 360 முதல் ரூ. 540 வரை உயரக்கூடும். ரூ. 29,200 சம்பளத்தில், இந்த ஆதாயம் ரூ. 584 முதல் ரூ. 876 வரை இருக்கலாம்.

உயர் சம்பளம் வாங்கும் நபர்களுக்கு இதன் தாக்கம் இன்னும் குறிப்பிடத்தக்கதாக இருக்கும். உதாரணமாக, ரூ. 56,100 போன்ற உயர் சம்பள நிலைகளுக்கு, இந்த உயர்வு மாதத்திற்கு ரூ. 1,100–ஐத் தாண்டக்கூடும். மேலும் ரூ.2.5 லட்சம் அடிப்படைச் சம்பளம் பெறும் மூத்த நிலைகளில், மாதாந்திரப் பலன் ரூ. 5,000 முதல் ரூ. 7,500 வரை இருக்கலாம்.

இந்த முறை டிஏ உயர்வில் ஏன் தாமதம் ஏற்படுகிறது? வழக்கத்தை விட இந்த முறை இந்த அறிவிப்பு வெளிவர அதிக நேரம் எடுப்பதை பல ஊழியர்கள் கவனித்துள்ளனர். ஆனால், இதில் பெரிய கவலைக்குரிய விஷயம் எதுவும் இல்லை என்றே நிபுணர்கள் கருதுகிறார்கள். வழக்கமாக மார்ச் மாதத்தில் முதல் தவணை அறிவிக்கப்பட்ட முந்தைய ஆண்டுகளைப் போலல்லாமல், 2026–ஆம் ஆண்டுக்கான ஊதியச் சுழற்சியில் ஒரு சிறிய தாமதம் ஏற்பட்டுள்ளது. நிர்வாக வரிசைமுறை மற்றும் 8வது ஊதியக் குழுவின் கட்டமைப்பு நோக்கிய மாற்றம் ஆகியவையே இதற்குக் காரணமாக இருக்கலாம் என்பது பொதுவான கருத்தாக உள்ளது.

அகவிலைப்படி உயர்வுக்கான அறிவிப்பில் தாமதம் ஏற்படுவதால் மத்திய அரசு ஊழியர்களுக்கு எந்த வித நஷ்டமும் ஏற்படாது என்பது குறிப்பிடத்தக்கது. ஏனெனில், ஜனவரி 2026 முதல் அகவிலைப்படி உயர்வு அறிவிக்கும் மாதம் வரையிலான டிஏ அரியர் தொகை ஊழியர்களுக்கு கிடைக்கும். அதாவது, அறிவிப்பில் தாமதம் ஏற்பட்டாலும் பிரச்சனை இருக்காது.

இதற்கு முன் நடந்த மத்திய அமைச்சரவை கூட்டத்தில் அறிவிப்பு வெளியாகும் என எதிர்பார்க்கப்பட்டது. எனினும், அது நடக்கவில்லை. ஆனால், இன்னும் சில நாட்களில் மத்திய அரசின் அடுத்த அமைச்சரவை கூட்டம் நடக்கும் என்றும் அதில் இந்த அறிவிப்பு கண்டிப்பாக வெளிவரும் என்றும் பொருளாதார நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனுடன் 8வது ஊதியக்குழு தொடர்பான சில முக்கிய செய்தியளும் அடுத்த 2 வாரத்தில் கிடைக்கக்கூடும். இது ஊழியர்களுக்கு பெரிய அளவிலான நன்மைகளை அளிக்கும் என்றும் கூறப்படுகின்றது. இந்த வகையில் மத்திய அரசு ஊழியர்களுக்கு, டிஏ உயர்வு, சம்பள உயர்வு, டிஏ அரியர், 8வது ஊதியக்குழு என விரைவில் 4 நல்ல செய்திகள் கிடைக்கவுள்ளன.

# பள்ளி மாணவர்களுக்கு வரும் 17-ந்தேதி முதல் கோடை விடுமுறை! பள்ளி கல்வித்துறை அறிவிப்பு...!!




சென்னை, ஏப். 16–

தமிழகத்தில் நிகழாண்டு சட்டப்பேரவைத் தேர்தல் ஏப்ரல் 23–ஆம் தேதி நடைபெறவுள்ளதால், வழக்கத்தைவிட முன்கூட்டியே தேர்வுகள் நடத்தப்பட்டன. அதன்படி 1 முதல் 9–ஆம் வகுப்பு மாணவர்களுக்கு நடைபெற்று வந்த முழு ஆண்டுத் தேர்வுகள் இன்று (ஏப்ரல் 16 வியாழக்கிழமை) உடன் நிறைவு பெறுகின்றன. இறுதிநாளில் சமூக அறிவியல் உள்ளிட்ட பாடத் தேர்வுகள் நடைபெறவுள்ளன..

இதையடுத்து மாணவர்களுக்கு வெள்ளிக்கிழமை (ஏப். 17) முதல் கோடை விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது. மீண்டும் பள்ளிகள் ஜூன் 1–ஆம் தேதி முதல் திறக்கப்படவுள்ளன. இந்த நிலையில், இந்த விடுமுறை நாள்களில் மாணவர்களின் பாதுகாப்பு கருதி பெற்றோர் கவனத்தில் கொள்ள வேண்டிய அம்சங்கள் குறித்து பள்ளிக்கல்வித் துறை இயக்குநர் எஸ்.கண்ணப்பன் சில அறிவுறு த்தல்களை வழங்கியுள்ளார்..அதன் விவரம் வருமாறு:–

மாணவர்கள் விடுமுறை நாள்களில் கடல், ஆறு, ஏரி, குளம் மற்றும் குட்டை போன்ற நீர் நிலைகளில் குளிப்பதற்கு பெற்றோர் அனுமதிக்க வேண்டாம்.

கோடை வெப்பம் அதிகமாக இருப்பதால் வெளிப்புற விளையாட்டுகளின்போது அதிக அளவு தண்ணீரை அருந்த செய்யுங்கள்.

வெயில் அதிகமாக இருக்கும் பகல் நேரத்தில் வெளியே செல்வதையும், விளையாடுவதையும் தவிர்க்கவும். விடுமுறை நாள்களில் சில மாணவர்கள் தங்கள் உடல் மற்றும் மனநலனைப் பாதிக்கும் சவால்களை எதிர்கொள்ள நேரிடும். அதை சரியாகக் கையாள வேண்டும்..

தனிமை உணர்வுகளைத் தடுக்க நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன் சேர்ந்து விளையாடுதல், உணவு அருந்துதல், இசை நிகழ்ச்சிகளை கவனித்தல் ஆகியவற்றின் மூலம் சமூக தொடர்புகளை ஊக்குவிக்கவும், மனநலனை பேணவும் முடியும். தொலைக்காட்சி, கைப்பேசி ஆகியவற்றைப் பார்ப்பதில் அதிகமான நேரத்தைச் செலவிடுவதைத் தவிர்க்க அறிவுறுத்த வேண்டும். மாணவர்களின் வளர்ச்சிக்கு சமச்சீரான உணவு அளிப்பது அவசியம். எனவே, பாரம்பரிய உணவு வகைகளைத் தரவேண்டும்.

கோடை காலத்துக்கு ஏற்ற பழவகைகளை வழங்க வேண்டும்.. இது தவிர மாணவர்களை அருகில் உள்ள பொதுநூலகங்களுக்கு அழைத்து சென்று ஒரு மணி நேரமாவது புத்தகங்களைப் படிக்க ஊக்குவிக்கவும். அவர்களின் ஆர்வங்களைப் பொருத்து காமிக்ஸ் புத்தகங்கள், பொது அறிவு நூல்கள், சிறார் கதைகள் மற்றும் நீதி நூல்களைப் படிக்க அறிவுறுத்த வேண்டும்.. இசை, நடனம், ஓவியம் போன்றவற்றில் ஆர்வமுள்ள மாணவர்களை விடுமுறை நாள்களில் கற்றுக்கொள்ள வாய்ப்பு ஏற்படுத்தட வேண்டும். தினமும் இருவேளை பல் துலக்கி, குளித்தல் போன்ற பழக்கங்களை ஊக்குவிக்க வேண்டும். பெரியோரை மதிக்கவும் அவர்களுக்கு உதவி செய்யவும் பழக்க வேண்டும் இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது..

மாணவர்களுக்கான கோடை விடுமுறை வெள்ளிக்கிழமை தொடங்கும் நிலையில், ஆசிரியர்கள் பள்ளி இறுதி வேலைநாளான ஏப்ரல் 25–ஆம் தேதி வரை பணிக்கு வந்து விடைத்தாள் மதிப்பீடு மற்றும் மாணவர் சேர்க்கை போன்ற நிர்வாகப் பணிகளைக் கவனிக்க வேண்டும் என பள்ளிக் கல்வித் துறை தெரிவித்துள்ளது.

# சமையல் கியாஸ் சிலிண்டர் வினியோகம் சீராக 4 ஆண்டுகள் ஆகும்?



புதுடெல்லி, ஏப். 16–

140 கோடி மக்கள்தொகையை கொண்ட இந்தியாவின் எல்.பி.ஜி. கியாஸ் தேவையில் 60 சதவீதம் இறக்குமதி வாயிலாகவே பூர்த்தி செய்யப்படுகிறது. ஈரான் – இஸ்ரேல் போருக்கு முன்பு எல்.பி.ஜி. இறக்குமதியில் 90 சதவீதம் ஹார்முஸ் ஜலசந்தி வழியாகவே பெறப்பட்டது. தற்போது, அந்த கடல் வழித்தடத்தில் கப்பல் போக்குவரத்து தடைபட்டுள்ளதால், இறக்குமதி அளவு 55 சதவீதமாக குறைந்துள்ளது. இதன் காரணமாக, இந்தியாவின் சமையல் எரிவாயு இறக்குமதி மற்றும் விலை மீதான அழுத்தம் அதிகரித்து வருகிறது. வீடுகளுக்கான கியாஸ் சிலிண்டர் வினியோகத்துக்கு மத்திய அரசு முக்கியத்துவம் அளித்து வருவதுடன், பற்றாக்குறையை சமாளிக்க மாற்று வழிகளையும் ஆராய்ந்து வருகிறது.

கியாஸ் இறக்குமதிக்கு குறிப்பிட்ட நாடுகளுக்கு பதிலாக, பல்வேறு நாடுகளை சார்ந்திருப்பது, மாற்று கடல் வழித்தடங்களை பயன்படுத்துவது, உள்நாட்டு உற்பத்தியை அதிகரிப்பது மற்றும் தேவையை நிர்வகிப்பது போன்ற மாற்று வழிகளை மத்திய அரசு ஆராய்ந்து வருகிறது.

என்றாலும் தற்போதுள்ள சூழ்நிலையில், இந்தியாவில் சமையல் கியாஸ் சிலிண்டர் வினியோகம் சீராக 3 முதல் 4 ஆண்டுகள் வரை ஆகும் என மத்திய அரசு அதிகாரிகள் அதிர்ச்சி தக வலை வெளியிட்டுள்ளனர்.

## செய்தியாளர் / போட்டோ கிராபர் தேவை

மதுரை / சென்னை ஐயை மையமாக கொண்டு இயங்கிவரும் ஒரு பத்திரிகை நிறுவனத்திற்கு விளம்பர பிரிவில் பணிபுரிய துடிப்பும் /ஆர்வமும் /அனுபவமும் நிறைந்த செய்தியாளர்கள் / புகைப்பட கலைஞர்கள் தேவை.

தொடர்பு – 7904806432

# தேர்தல் விழிப்புணர்வு, 3000 பள்ளி மாணவ, மாணவிகள் உலக சாதனை!




ஈரோடு, ஏப். 16–

ஈரோடு சிட்டி சென்ட்ரல் பள்ளி வளாகத்தில் சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு உங்கள் வாக்கு, உங்கள் உரிமை, உங்கள் கடமை, நிகழ்ச்சி நடைபெற்றது இந்நிகழ்ச்சிக்கு டாக்டர் கே எம். அபுல்ஹசன், தம்பியண்ணன் ஜுவல்லர்ஸ் ச.ஆஷிக் முகமது ஆகியோர் தலைமை தாங்கினார். இந்நிகழ்ச்சியின் சிறப்பு அழைப்பாளராக ஈரோடு மாவட்ட ஆட்சியர் ச. கந்தசாமி ஐஏஎஸ்..., கலந்து கொண்டு வாக்களிப்பதின் கடமை குறித்த நிகழ்ச்சியினை துவக்கி வைத்தார். இதில் மாணவ, மாணவியர், பெற்றோர் உள்ளிட்ட 3000 பேர் கலந்து கொண்டு உலக சாதனை படைத்தனர். இந்நிகழ்ச்சியில் பள்ளி முதல்வர் தமிழரசி, பொருளாளர் ஷபிகா, உள்ளிட்ட ஆசிரியர்கள் மற்றும் பள்ளி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# வேலை வாய்ப்பு

## இந்திய ரயில்வே நிதி நிறுவனத்தில் வேலைவாய்ப்பு 2026!




Indian Railway Finance Corporation Limited நிறுவனத்தில் Assistant மற்றும் Assistant Manager (Finance) பணியிடங்களுக்கு மொத்தம் 23 காலியிடங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. B.Com உடன் CA/CMA அல்லது MBA/PGDM (Finance) முடித்தவர்கள் விண்ணப்பிக்கலாம். தேர்வு செய்யப்படுபவர்களுக்கு மாதம் ₹21,000 முதல் ₹1,40,000 வரை ஊதியமாக வழங்கப்படும்.

நிறுவனம் Indian Railway Finance Corporation Limited (IRFC)

வகை மத்திய அரசு வேலை

காலியிடங்கள் 23

பணியிடம் இந்தியா முழுவதும்

ஆரம்ப தேதி 04.04.2026

கடைசி தேதி 01.05.2026

1. பதவி: Assistant (NE5 Level)

சம்பளம்: மாதம் Rs.21,000 74,000/–

காலியிடங்கள்: 16

கல்வி தகுதி: B.Com (60% marks) + CA/ CMA

வயது வரம்பு: 18 முதல் 30 வயது வரை

2. பதவி: Assistant Manager (Finance) E1 Level

சம்பளம்: மாதம் Rs.40,000 1,40,000/–

காலியிடங்கள்: 07

கல்வி தகுதி: B.Com (60%marks ) + CA/CMA OR MBA/ PGDM (Finance)

வயது வரம்பு: 18 முதல் 30 வயது வரை

வயது தளர்வு:

SC/ST 5 ஆண்டுகள்

OBC 3 ஆண்டுகள்

PwBD (Gen/EWS) 10 ஆண்டுகள்

PwBD (SC/ST) 15 ஆண்டுகள்

PwBD (OBC) 13 ஆண்டுகள்

விண்ணப்ப கட்டணம்:

ST/ SC/ Ex–s/ PWD கட்டணம் இல்லை

Others Rs.500/–

தேர்வு செய்யும் முறை:

Compute Based Test (CBT)

Document Verification

Interview

Medical Test

**முக்கிய தேதிகள்:**

விண்ணப்பிக்க ஆரம்ப தேதி: 04.04.2026

விண்ணப்பிக்க கடைசி தேதி: 01.05.2026 at 11.45 PM

தேர்வு நடைபெறும் தேதி: ஜூன் 2026

**விண்ணப்பிக்கும் முறை:**

விண்ணப்பதாரர்கள் https://irfc.co.in/ இணையதளம் மூலம் ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம் அல்லது கீழே கொடுக்கப்பட்டுள்ள லிங்கை கிளிக் செய்து ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம்.

**குறிப்பு:** விண்ணப்பிப்பதற்கு முன்பு அதிகாரப்பூர்வ அறிவிப்பில் குறிப்பிடப்பட்டிருக்கும் தகுதி அனைத்தும் தங்களிடம் இருக்கிறதா என உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

# ஏறுமுகத்தில் தங்கம் விலை!



சென்னை, ஏப். 16–

சென்னையில் இன்று 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.320 உயர்ந்து ரூ.1,14,880–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

தங்கம் விலை கிராமுக்கு ரூ.40 உயர்ந்து ரூ.14,360–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

வெள்ளி விலையில் இன்று மாற்றம் இல்லை. ஒரு கிராம் வெள்ளி ரூ.275–க்கும், பார் வெள்ளி 2 லட்சத்து 75 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்

127, T.P.K.ரோடு, மதுரை.

Ph: 98659 88882

மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை Ph: 98659 88881





# அனல் பறக்கும் தேர்தல் களம்..!





மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் ஈரோடு மேற்கு சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் கழக வெல்லும் வேட்பாளர் அமைச்சர் சு.முத்துசாமி சூரம்பட்டி பகுதியில் கூட்டணி கட்சி நிர்வாகிகளுடன் சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். நிகழ்ச்சியில் தலைமை செயற்குழு உறுப்பினர் டி எஸ் குமாரசாமி, பகுதி செயலாளர் வில்லரசம்பட்டி ஏ முருகேசன், திண்டல் அறங்காவலர் குழு தலைவர் வேலுச்சாமி மாமன்ற உறுப்பினர் கீர்த்தனா, உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



பெரம்பலூர் மாவட்டம் குன்னம் தொகுதி ஒதியம் பிரிவு சாலையில் நடைபெறும் மாபெரும் தேர்தல் பரப்புரைப் பொதுக்கூட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் பங்கேற்க உள்ளார். பெரம்பலூர், குன்னம், அரியலூர் மற்றும் ஜெயங்கொண்டம் தொகுதிகளின் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து பரப்புரை மேற்கொள்ள உள்ளார். இதனையொட்டி, பொதுக்கூட்ட மைதானம், மேடை மற்றும் வரவேற்பு ஏற்பாடுகளை கழக துணைப் பொதுச்செயலாளர், மேனாள் ஒன்றிய அமைச்சர் நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா நேரில் பார்வையிட்டு உரிய ஆலோசனைகளை வழங்கினார். அதுசமயம் குன்னம் வேட்பாளர் சா.சி.சிவசங்கர் மற்றும் கழக நிர்வாகிகள் கூட்டணி கட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## தேர்தல் நடத்தை விதிகளை மீறியதாக விஜய்/ ஓ.பன்னீர்செல்வம் மீது வழக்குப்பதிவு!



சென்னை, ஏப். 16–

தேர்தல் நடத்தை விதிகளை மீறியதாக தவெக தலைவர் விஜய் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. விஜய், தியாகராயர் நகர் தவெக வேட்பாளர் ஆனந்த், தென் சென்னை மாவட்ட செயலாளர் அப்புனு மீது வழக்கு. விஜய் உள்ளிட்டோர் மீது 2 பிரிவுகளின் கீழ் சென்னை மாம்பலம் போலீசார் வழக்கு பதிவுசெய்தனர்.

இதே போல் போடி தாலுகா அம்மாபட்டியில் உள்ள சுந்தரராஜபுரம் பகுதியில் போடி தொகுதி தி.மு.க. வேட்பாளரும், முன்னாள் முதல்–அமைச்சருமான ஓ.பன்னீர் செல்வம் பிரசாரத்தில் ஈடுபட்டார். அப்போது அனுமதிக்கப்பட்ட நேரத்தை கடந்தும் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டதாக கூறப்படுகிறது.

இதுகுறித்து நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி தேர்தல் பறக்கும் படை அலுவலர் நவநீத பாண்டியன் போடி போலீஸ் நிலையத்தில் புகார் கொடுத்தார். அதன்பேரில், ஓ. பன்னீர்செல்வம், முன்னாள் எம்.பி. ரவீந்திர நாத், கட்சி நிர்வாகிகள் உள்பட 5 பேர் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## வாக்காளர் அடையாள அட்டை: புதிய கார்டு ஆன்லைனில் டவுன்லோடு செய்வது எப்படி?



சென்னை, ஏப். 16–

வாக்காளர் அட்டை பழையதாகவும் மோசமாகவும் இருந்தால் புதிய வாக்காளர் அட்டையை மாற்ற மத்திய அரசு அறிவுறுத்தியுள்ளது. இ வாக்காளர் அட்டையை எளிதாக ஆன்லைனிலையே டவுன்லோடு செய்யலாம். இதற்கு வாக்காளர்கள், voters.eci.gov.in/login என்ற இணையதளம் சென்று VOTER ID எண்ணை உள்ளீடு செய்யவேண்டும்.

பின் மொபைலுக்கு வரும் ஓடிபி–ஐ பதிவிட்டால் புதிய டிஜிட்டல் கார்டை உடனே பதிவிறக்கம் செய்யலாம் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. வாக்காளர்கள் வாக்காளர் அடையாள அட்டை இல்லாவிட்டாலும் ஆதார், பான் கார்டு, பாஸ்போர்ட், டிரைவிங் லைசென்ஸ் உள்ளிட்ட 12 வகையான ஆவணங்களை காட்டி வாக்குப்பதிவு செய்யலாம் எனவும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.



புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதியில் பாஜக சார்பில் போட்டியிடும் ராமச்சந்திரன் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகிறார். புதுக்கோட்டை மாநகராட்சிக்கு உட்பட்ட கட்டியாவயல் பகுதியில் தாமரை சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்ட ராமச்சந்திரன், போதை கலாச்சாரம் ஒழிய தாமரை சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும் என கேட்டுக் கொண்டார். அப்போது வேட்பாளருக்கு பெண்கள் ஆராத்தி எடுத்து உற்சாக வரவேற்பு அளித்தனர்.



தமிழ்நாடு 2026 பொதுதேர்தலை முன்னிட்டு, தேனி மாவட்டத்தில் உள்ள 1,395 வாக்கு சாவடி மையங்களில் அரசு அலுவலர்கள், ஆசிரியர்கள் உள்பட6,696 பேர் பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர். இவர்களுக்கு 2–ம் கட்ட பயிற்சி மாவட்டத்தில் உள்ள சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட கல்லூரி, பள்ளிகளில் நடந்தது.தேர்தல் பணியில் ஈடுபடும் அரசு அலுவலர்களின் தபால் ஓட்டுக்கள் பதிவு செய்யும் பணியும் நடைபெற்றது. இதனை மாவட்ட தேர்தல் அதிகாரி ரஞ்ஜித்சிங் பார்வையிட்டார்.



தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் சட்டமன்ற தொகுதி அ.தி.மு.க வேட்பாளர் வி.டி. நாராயணசாமியை ஆதரித்து, கூட்டணியில் உள்ள அ.ம.மு.க. பொது செயலாளர் டி.டி.வி. தினகரன்போடி நகர் பகுதியில் உள்ள தேவர் சிலை அருகில் தேர்தல் பிரச்சாரம் செய்தார்.



மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் பல்லடம் சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் க செல்வராஜ் எம்.எல்.ஏ அவர்களுக்கு முதலிபாளையம் ஊராட்சியில் உள்ள பொது மக்களை சந்தித்து வாக்கு சேகரிப்பில் ஈடுபட்ட சட்டமன்ற வேட்பாளர் அவர்கள் வெற்றி பெற்றவுடன் முதலில் பாளையத்தில் உள்ள அடிப்படை தேவைகளை அனைத்தும் நிறைவேற்றி கொடுப்பேன் எனவும் இந்த ஊரில் நீண்ட ஆண்டு காலமாக பட்டா இல்லாமல் இருப்பதாகவும் அதனை தான் வெற்றி பெற்றவுடன் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் மேலும் தினசரி தண்ணீர் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என வாக்குறுதி கொடுத்தார் உடன் தொகுதி பார்வையாளர் தென்றல் செல்வராஜ். ஒன்றிய செயலாளர் விஸ்வலிங்கசாமி. மாவட்டத் துணைச் செயலாளர் டிஜிட்டல் சேகர். ஊராட்சி தேர்தல் பொறுப்பாளர் நல்லூர் ரவி. வி பி எஸ் பாண்டியன். அனைத்து திருச்சபைகளின் பொறுப்பாளர் அன்புராஜ். மற்றும் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியின் நிர்வாகிகள் பங்கேற்றனர்...



இராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை பகுதியில் தேர்தல் பணிகள் வேகமெடுத்து வருகின்றன. காதர் பாட்சா முத்துராமலிங்கம் மீண்டும் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடும் நிலையில், நகர்மன்ற தலைவர் செஹானாஸ் ஆபிதா தலைமையில் பெண்கள் நிர்வாகிகள் இணைந்து முகமது காசி அப்பா தர்கா, பட்டாணியப்பா தர்கா உள்ளிட்ட பகுதிகளில் வீடு வீடான பொதுமக்களை நேரில் சந்தித்து வாக்கு சேகரிப்பு பிரசாரத்தில் ஈடுபட்டனர். “திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள் எடுத்துரைக்கப்பட்டதால், பொதுமக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றதுடன் உதயசூரியன் சின்னத்திற்கே எங்கள் வாக்கு” என உறுதியளித்தனர். இந்த நிகழ்வு கீழக்கரை பகுதியில் தேர்தல் சூழலை மேலும் உற்சாகப்படுத்தியுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

## தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையில் கடந்த ஐந்து ஆண்டுகளில் இராசிபுரம் சட்டமன்ற தொகுதியில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நலத்திட்டங்கள் மற்றும் வளர்ச்சித் திட்டப்பணிகளின் விபரங்கள்: கலைஞர் மகளிர் உரிமைத் தொகை:

நாமக்கல், ஏப். 16–

இராசிபுரம் வட்டத்தில் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் 58,226 மகளிர்பயன் பெற்றுள்ளனர். புதுமைப் பெண் திட்டம்: புதுமைப் பெண் திட்டத்தின் கீழ் 3,725 மாணவியர்கள் பயன் பெற்றுள்ளனர். மகளிர் சுய உதவிக் குழு கடனுதவி: இராசிபுரம் நகராட்சியில் 265 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.117.53 கோடி கடனுதவி வழங்கப்பட்டது. இராசிபுரம், நாமகிரிப்பேட்டை, வெண்ணந்தூர் ஒன்றியத்தில் 1774 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு ரூ.487.60கோடிகடனுதவி வழங்கப்பட்டுள்ளது. திருமண நிதியுதவித் திட்டம்: இராசிபுரம், நாமகிரிப்பேட்டை, வெண்ணந்தூர் ஒன்றியத்தில் திருமண நிதியுதவி திட்டத்தின் கீழ் 324 மகளிர் ரூ.132.75 இலட்சம்மதிப்பில்பயன்பெற்றுள்ளனர். மக்களைத் தேடி மருத்துவம்: இராசிபுரம் நகராட்சியில் மக்களைத் தேடி.மருத்துவம் திட்டத்தின் கீழ்16,869 பயனாளிகள் பயன் பெற்றுள்ளனர். இராசிபுரம், நாமகிரிப்பேட்டை, வெண்ணந்தூர் ஒன்றியத்தில் மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ்74,983 பயனாளிகள்பயன். மகப்பேறு நிதியுதவித் திட்டம்: இராசிபுரம் நகராட்சியில் டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டிமகப்பேறு நிதியுதவித் திட்டத்தின் கீழ் 2,273 கர்ப்பிணிகள் ரூ.1.23 கோடி மதிப்பில் பயன் பெற்றுள்ளனர். இராசிபுரம், நாமகிரிப்பேட்டை, வெண்ணந்தூர் ஒன்றியத்தில் டாக்டர்.முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின் கீழ்11,203 கர்ப்பிணிகள் ரூ.7.14 கோடி மதிப்பில் பயன்பெற்றுள்ளனர். மருத்துவஉட்கட்டமைப்பு மக்கள் நல்வாழ்வு துறையின் மூலம்பல்வேறு திட்டத்தின் கீழ் ரூ.2.45.கோடி மதிப்பில் 3 மருத்துவ உட்கட்டமைப்பு பணிகள் முடிவு பெற்றுள்ளது. முதலமைச்சர்காலைஉணவுதிட்டம் இராசிபுரம் நகராட்சியில் முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தின் கீழ் 12 பள்ளிகளைச் சேர்ந்த 877 மாணவ, மாணவியர்கள்பயன் பெற்றுள்ளனர். இராசிபுரம், நாமகிரிப்பேட்டை, வெண்ணந்தூர் ஒன்றியத்தில் முதலமைச்சரின் ‘காலை உணவு



திட்டத்தின் கீழ் 143.பள்ளிகளைச் சேர்ந்த 6,688 மாணவ, மாணவியர்கள்பயன் பெற்றுள்ளனர். மதிய உணவு திட்டம்: மதிய உணவு திட்டத்தின் கீழ் இராசிபுரம் நகராட்சியில் 1,804 மாணவ, மாணவியர்களும், இராசிபுரம், நாமகிரிப்பேட்டை, வெண்ணந்தூர் ஒன்றியத்தில் 17,149மாணவ, மாணவியர்களும் பயன் பெற்றுள்ளனர். இல்லம் தேடி.கல்வி திட்டம்: இல்லம் தேடி கல்வி திட்டத்தின் கீழ் ஆண்டொன்றிற்கு.53,218 மாணவ, மாணவியர்கள் ரூ.2.39 கோடி மதிப்பில் பயன்பெற்றுள்ளனர். எண்ணும் எழுத்தும் திட்டம்: எண்ணும் எழுத்தும்.திட்டத்தின் கீழ் ஆண்டொன்றிற்கு 8012 மாணவ, மாணவியர்கள் ரூ.1.48 கோடி மதிப்பில்.பயன் பெற்றுள்ளனர். திறன்மிகு வகுப்பறைகள்: திறன்மிகு வகுப்பறைகள் திட்டத்தின் கீழ் ரூ.2.03 கோடி மதிப்பில்102 வகுப்பறைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. உயர் தொழில் நுட்ப ஆய்வகங்கள்: ரூ.2.43 கோடி மதிப்பில் உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. உட்கட்டமைப்பு பணிகள்: ரூ.7.12 கோடி மதிப்பில் 188 பள்ளி உட்கட்டமைப் புபணிகள். நான்முதல்வன்திட்டம் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் இராசிபுரம் வட்டத்தில் 28,569 இளைஞர்களுக்கு திறன் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. தமிழ்ப் புதல்வன் திட்டம் தமிழ்ப் புதல்வன் திட்டத்தின் கீழ் இராசிபுரம் வட்டத்தில் 3,443 மாணவர்கள் பயன் பெற்றுள்ளனர். சமூக பாதுகாப்பு திட்டம் இராசிபுரம் வட்டத்தில் சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் ரூ.2.84 கோடி மதிப்பில் 22,698 பயனாளிகள் பயன் பெற்றுள்ளனர். வீட்டுமனைபட்டா வழங்குதல்: இராசிபுரம் வட்டத்தில் வீட்டுமனை. பட்டா வழங்கும் திட்டத்தின் கீழ் 8,637 பயனாளிகள் பயன் பெற்றுள்ளனர். நாரைகிணறு பகுதிமக்களின் 100 ஆண்டு கால கோரிக்கையினை ஏற்று 814 நபர்களுக்கு ரூ.32.84 கோடிமதிப்பீட்டில் 723 பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளிகள் உதவிகள்: மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 975 மாற்றுத்திறனாளிளுக்கு பல்வேறு உதவி உபகரணங்கள் மற்றும். உதவித்தொகை வழங்கப்பட்டது. தாயுமானவர் திட்டம்: இராசிபுரம் வட்டத்தில் தாயுமானவர் திட்டத்தின் கீழ் 65 வயதிற்கு மேற்பட்ட முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் என 12,304 பயனாளிகள் இல்லத்திற்கு நேரடியாக பொது விநியோக பொருட்கள.வழங்கப்பட்டு வருகிறது. விலையில்லா வேட்டி, சேலைகள் பொங்கல் திருநாளை முன்னிட்டு. விலையில்லா.வேட்டி, சேலைகள் வழங்கும் திட்டத்தின் கீழ்1,61,026 பயனாளிகள் பயன் பெற்றுள்ளனர். .. அண்ணல் அம்பேத்கார் தொழில் முன்னோடிகள் திட்டம்: நாமகிரிபேட்டை வட்டத்தில் அண்ணல் அம்பேத்கார் தொழில் முன்னோடிகள் திட்டத்தின் கீழ் 8 பயனாளிகளுக்குரூ.1.06 கோடிமதிப்பில். கடனுதவி வழங்கப்பட்டது. வேலையில்லா இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டம் வேலையில்லா இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ் 42.பயனாளிகளுக்கு ரூ.77.57 இலட்சம் மதிப்பில் கடனுதவி. பிரதமமந்திரி உணவு பதப்படுத்தும் குறு நிறுவனங்களை முறைப்படுத்தும் திட்டத்தின் கீழ் நாமகிரிப்பேட்டை மற்றும் இராசிபுரம் வட்டத்தில் 68 தொழில் முனைவோர்களுக்கு ரூ.4.67 கோடி மதிப்பில் கடனுதவி வழங்கப்பட்டது. புதிய தொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டு த்திட்டத்தின் கீழ் நாமகிரிப்பேட்டை மற்றும் இராசிபுரம் வட்டத்தில்10 பயனாளிகளுக்கு ரூ.3.36 கோடி மதிப்பில் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. கலைஞர் கைவினைத் திட்டம்: கலைஞர் கைவினைத் திட்டத்தின் கீழ் 81 அனைத்து வகைகை வினை கலைஞர்களுக்கு ரூ.18.17 இலட்சம் மதிப்பில் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. தொழில் முனைவு திட்டம்: முதலமைச்சரின் ஆதிதிராவிட மற்றும் பழங்குடியினர் சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான தொழில் முனைவு திட்டத்தின் கீழ் ரூ.3.66 கோடி மதிப்பில் 63 தனி நபர் மற்றும் மகளிர் சுய உதவிக்குழுவினர் பயன்பெற்றுள்ளனர். ஆதி திராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டு கழகம்: தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டு கழகம் மூலம் இராசிபுரம் வட்டத்தில் 92 ஆதிதிராவிடர் பழங்குடியிர் இனத்தைச் சார்ந்த தொழில் முனைவோருக்கு ரூ.3.56 கோடி மதிப்பில் மானியத்துடன் கூடிய கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. பயிர் கடன் மற்றும் நகைக்கடன்: கூட்டுறவுத் துறையின் மூலம் இராசிபுரம் வட்டத்தில் 12,026 விவசாயிகளுக்கு ரூ.664.39 கோடி மதிப்பில் பயிர் கடன்மற்றும் 2,28,879 பயனாளிகளுக்கு ரூ.1,750.00 கோடி நகைக்கடன் வழங்கப்பட்டுள்ளது. நகைக் கடன் தள்ளுபடி: 12,930 பயனாளிகளுக்கு ரூ.63.00 கோடி நகைக் கடன் தள்ளுபடி வழங்கப்பட்டது. கலைஞரின் அனைத்து கிராம வேளாண் வளர்ச்சித் திட்டம்: கலைஞரின் அனைத்து.கிராம வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ்31,946 விவசாயிகளுக்கு ரூ.1.61 கோடி மதிப்பில் ஆழ்துளை கிணறுகள், பண்ணைக் குட்டைகள், வேளாண் இடுபொருட்கள் வழங்கப்பட்டது. வேளாண் இயந்திரமாக்கல் திட்டம்: வேளாண்மை இயந்திர மாக்கல் திட்டத்தின் கீழ்192 விசாயிகளுக்கு ரூ.3.59 கோடி மதிப்பில் விதைப்பு முதல்.அறுவடை வரை பயன்படும் இயந்திரங்கள்.மானியவிலையில் வழங்கப்பட்டுள்ளது. தோட்டக் கலைத்துறையின் மூலம். இடுபொருட்கள் வழங்குதல்: தோட்டக் கலைத்துறையின் மூலம் 2,288 விவசாயிகளுக்கு ரூ.3.37 கோடிமதிப்பில் தோட்டக்கலை. இடுபொருட்கள், பசுமைகுடில்கள் மற்றும் கருவிகள் வழங்கப்பட்டுள்ளது. நுண்ணீர் பாசனம் திட்டம்: நுண்ணீர் பாசனம் திட்டத்தின் கீழ் ரூ.48.19. கோடி.மதிப்பில் 4,739 பயனாளிகள் பயன் பெற்றுள்ளனர்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020